வண்டிக்காரன் பாட்டு – பாரதியார் கவிதை




அண்ணனுக்கும் தம்பிக்கும் சம்பாஷணை

"காட்டு வழிதனிலே-அண்ணே!
கள்ளர் பயமிருந்தால்?"-எங்கள்
வீட்டுக் குலதெய்வம்-தம்பி
வீரம்மை காக்குமடா!"
"நிறுத்து வண்டி யென்றே-கள்ளர்
நெருக்கிக் கேட்கையிலே?'-"எங்கள்
கறுத்த மாரியின் பேர்-சொன்னால்
காலனும் அஞ்சுமடா!".